**தலைப்பு 264 - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 29 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 17 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்ட செயலகத்தின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான ஏதாயினும் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் இவை மாவட்ட செயலகத்தின் வினைத்திறமையான உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிரயாயத்தினை தெரிவிப்பதற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதனை

எனது கணக்காய்வின் போது இனம் கண்டு கொள்ளப்பட்ட குறைபாடு உட்பட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிககூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மாவட்டச்செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

#### (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்ட மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவினங்களில் கருத்திட்டங்கள் இரண்டாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் இரண்டு கருத்திட்டங்களினதும் மொத்தச் செலவினமாக செலவு விடய ரீதியாக காண்பிக்கப்பட்டுள்ளமையால் திறைசேரியின் கணனி அச்சுப் பிரதியுடன் ஒப்பிட்டு செவ்வை பார்க்க முடியாதுள்ளது. | திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் 271/2019 இலக்க 03.12.2019 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியறிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திறைசேரியால் மேலதிக அறிவுறுத்தல்கள் ஏதேனும் தரப்படுமிடத்து சீர்ப்படுத்தப்படும். | கருத்திட்டங்கள் இரண்டாக இருப்பதால் செலவின விபரம் கருத்திட்ட வாரியாக வேறு வேறாகக் காண்பிக்கப்பட வேண்டும். |

## (ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 31 திசெம்பர் 2019 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த சேவை வறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் மேலும் அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு சென்ற அலுவலர்களின் கூட்டுமொத்தம் ரூபா 2.497 மில்லியன் பெறுமதியானவற்றை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றோர் மீதி ரூபா 1,703,664 சீர் செய்யப்பட்டுள்ளது. பதவி வெறிதாக்கப்பட்டோர் நிலுவை மீதி ரூபா 251,790 அவர்களின் பிணையாளிகளிடமிருந்து அறவிடப்படுகின்றது.<br>ஓய்வு பெற்றோர் நிலுவை மீதி ரூபா 541,650 சீர் செய்யப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV பிரவு 4 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் நிலுவைகள் அறவிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | மாகாண சபைக்கு மாற்றலாகிச் சென்ற அலுவலர்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,703,664 பெறுமதியான இரு வருட கடன்கள் தொடர்பில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதிய மற்றும் 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 3.2.1 இற்கு அமைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரு உத்தியோகத்தர்களின் தொகைகளும் சீர் செய்யப்பட்டுள்ளது. | 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதிய மற்றும் 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 3.2.1 இற்கு அமைய உரிய காலத்தினுள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (iii) | மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கிடையில் முற்பணக் கடன்களின் எல்லைகளை வரையறுப்பது தொடர்பில் முறையான பொறிமுறை ஒன்று கையாளப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டுத் திணைக்களத்தால் எமக்கு வழங்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் உச்ச எல்லை மற்றும் இழிவு எல்லைகளைக் கருத்திற்கொண்டே எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | முற்பணக் கடன்களின் எல்லைகளை வரையறுப்பது தொடர்பில் முறையான பொறிமுறைகளை கையாள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |

## (இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---------------------------------------------------------------------------------

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான காணியின் பெறுமதி ரூபா 35 மில்லியன் என பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் இப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 35 மில்லியன் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் JN/LE/476 இலக்க 03.01.2019 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மதிப்பீட்டு தொகையானது உறுதியானதும் இறுதியானதும் அல்ல என்றும் இக் காணிக்கான சுவீகரிப்பு வழக்கு இன்னமும் நீதிமன்றத்தால் தீர்க்கப்படாததாலும் மதிப்பீட்டுத் தொகை கணக்குகளில் பதியப்படவில்லை. இது தொடர்பான தீர்ப்புக்கள் வெளியிடப்படும் நிலையில் எம்மால் மேலதிக நடவடிக்கைகள் மெற்கொள்ளப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட காணிகளின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ii) | காரைநகர் பிரதேச செயலகத்தின் காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அதன் பெறுமதி ரூபா 2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இக்காணியில் அலுவலக கட்டடமானது ரூபா 58.14 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு 30 யூன் 2020 வரை எதுவித நடவடக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமையாளரினை அடையாளங்காண முடியாதுள்ளது. அதன் பிரகாரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு மேற்படி உரிமை கோரப்படாத காணியை சுவீகரிக்கும் நோக்கத்திற்காக கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தனியார் காணியை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

யாழ் மாவட்ட செயலகத்தில் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு எம்மால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. எனினும் சில கிளைகளின் தகவல்கள் இற்றைப்படுத்தப்படவில்லை. அவை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |
| (ii) | **வாகன நிரற்படுத்தும் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தங்களால் குறிப்பிடப்பட்ட பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட முறையில் பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | | **ரூபா மில்லியன்** | | | |
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணங்கள் | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | 1.18 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தால் பொருட்கள் சேவைகள் கிடைப்பனவிற்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிற்கு கட்டுநிதி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் நிதிப்பற்றாக்குறையில் இருந்தமை மற்றும் சங்கங்கள் கடந்த காலங்களில், தங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட வேலைகளை வினைத்திறனான முறையில் உரிய காலப்பகுதிகளில் பூரணப்படுத்தி ஒத்துழைப்பு வழங்கியதைக் கருத்திற் கொண்டும் முற்பணம் வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 371(2) இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 7.67 | இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 26 பிடிபண வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 26 வைப்புக்களில் 02 வைப்புக்கள் தவிர ஏனையவை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 571 இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 137, 138 | 55.35 | பொருட்கள் சேவைகள் பெற்றுக் கொள்ள முன்னர் 2019 ஆம் ஆண்டு 158 எண்ணிக்கையான காசோலைகள் வரையப்பட்டு மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பில் வைத்திருக்கப்பட்டிருந்தன.<br><br>ஏற்கனவே வழங்கப்பட்ட இக் காசோலைகளிற்கு 31 மார்ச் 2020 வரை பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாததுடன் இவை மாற்றப்படாத காசோலைகள் பட்டியலில் காணப்பட்டுள்ளது. | பொருட்கள் சேவைகளை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 137, 138 இன் பிரகாரம் பொருட்கள் சேவைகள் பெறப்பட்ட பின்பே காசோலைகள் வரையப்படல் வேண்டும் |
| (iv) | நிதிப்பிரமாணம் 113 | 2.08 | 18 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் இருந்து பல்வேறு காரணங்களால் ரூபா 2.08 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் நிதிப் பிரமாணம் 113 இற்கு அமைவாக கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இத்தொகையை பதிவழிப்பதற்கு தொடர்ச்சியாக எம்மால் அமைச்சிற்கு விண்ணப்பம் செய்யப்பட்டு வருகின்றது. அனுமதி கிடைத்ததும் அதற்கான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணம் 113 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 94 | 1.30 | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்களிற்கான சுயாதீன உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனி வருங்காலங்களில் இது தொடர்பில் எம்மால் கூடிய அக்கறை செலுத்தப்படும் | நிதிப்பிரமானம் 94 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**(ஊ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரவெட்டி பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக கட்டட நிர்மாண வேலையின் கட்டம் III ற்கான சிட்டை 26.12.2019 அன்று சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் இவ் வேலைக்கான கொடுப்பனவாக பெறுமதிசேர் வரி பெறுமதி (VAT) ரூபா 473,083 உள்ளடங்கலாக 28.02.2020 அன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் VAT கொடுப்பனவானது, ஒப்பந்ததாரரின் VAT இலக்கமானது செயலற்ற நிலையிலிருந்த போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு குறித்த பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவை மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் அதன் செயற்படு நிலை(Active) பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தால் கூட்டுமொத்தம் ரூபா 10,415.56 மில்லியன் தொகையான கட்டுநிதிக்காக திறைசேரியிடம் விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 8,590.99 மில்லியன் தொகையான கட்டுநிதியே விடுவிக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டினுள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் ரூபா 1,824.57 மில்லியன் தொகையான கட்டுநிதி பற்றாக்குறையாக வழங்கப்பட்டிருந்தமையால் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதிருந்ததுடன் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் நிறைவுமட்டத்தை அடையமுடியவில்லை. | எமது கோரிக்கையின் பிரகாரம் அமைந்த கட்டுநிதி திறைசேரியால் எமக்கு விடுவிக்கப்படவில்லை. இதனால் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதிருந்ததுடன் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் நிறைவு மட்டத்தை அடையமுடியவில்லை. | கட்டுநிதிகளை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மீண்டெழும் செலவினத்தில் 05 சந்தர்ப்பங்களில் 05 செலவினத்தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 13.62 மில்லியனும் மூலதனச் செலவினத்தில் 11 சந்தர்ப்பங்களில் 8 செலவினத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 1,806.77 மில்லியன் பெறுமதியான செயற்திட்ட வேலைகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் விடுவிக்கப்படும் நிதியொதுக்கீடுகளின் பிரகாரம் வேலைகள் முடிவுறுத்தப்பட்டது. எனினும், அவற்றுக்கான கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறாததினால் அவற்றுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாமல் போனது. | செலவினங்களை மேற்கொள்வதற்கு முன் கட்டுநிதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல், நிதி ஏற்பாடு மாற்றல், குறைநிரப்பு பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல், சேமிப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவினங்களின் மூலஒதுக்கீட்டில் 10 செலவு விடயங்களில் 6.25 தொடக்கம் 48.31 வீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 7.92 மில்லியன் காணப்பட்டிருந்த அதேவேளை வேறு 6 செலவின விடயங்களில் 13.44 தொடக்கம் 46.15 வீதம் என்ற வீச்சிலான அதே கூட்டுமொத்த தொகையால் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இது மீண்டெழும் செலவினத்திற்கான மதிப்பீடு முறையான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. | இவ்வாறான விடயங்களில் எதிர்காலத்தில் கூடுதலான அக்கறை செலுத்தப்படும் என்பதையும் பாதீட்டிற்கும் உண்மைச் செலவீனத்திற்குமான இடைவெளியைக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மீண்டெழும் செலவினத்திற்கான மதிப்பீடு முறையான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஆ) | மீண்டெழும் செலவினங்களின் மூல ஒதுக்கீடுகளின் 10 செலவின விடயங்களில் 6.25 தொடக்கம் 48.31 வீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் ஏற்பட்டு வகைமாற்றம் செய்யப்பட்டமைக்கான திருப்திகரமான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வகைமாற்றத்திற்கான சரியான காரணங்கள் எம்மால் அமைச்சின் செயலாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் அக்காரணங்களின் மேல் எழுந்த திருப்திநிலையின் காரணமாக அமைச்சின் செயலாளரால் எமக்கு வகைமாற்றத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே எம்மால் கணக்கறிக்கைகளில் வகைமாற்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் செலவினத்திற்கான மதிப்பீடு முறையான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். சேமிப்பிற்கான நியாயமான காரணங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (இ) | 24 செப்தெம்பர் 2019 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கமைய மீளாய்வாண்டில் மூலதனச்செலவினங்களுக்கான 10 சதவித சேமிப்பானது மேற்கொள்ளப்படடிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச்செயலகத்தின் செலவினத்தலைப்பான 264 இற்கு 10 சதவித சேமிப்பானது எம்மால் காட்டப்பட்டது. எனினும் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதியொதுக்கீட்டில் அமைச்சினாலும் திணைக்களங்களாலும் 10 சதவீத சேமிப்பிற்கான | முடிவடைந்த காலத்தின் விகிதாசாரத்திற்கேற்ப மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதை கணக்கீட்டு உத்தயோகத்தர் உறுதிப்படுத்திக்கொள்வதன் மூலம் சுற்றுநிரூபத்தின்படியான சேமிப்பை மேற்கொள்ள வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டைத் தவிர்த்த நிதியே எமக்கு விடுவிக்கப்பட்டதால் எம்மால் மூலதனச்செலவினத்தின் மீதான 10 சதவீத சேமிப்பை காட்ட வேண்டிய தேவை எழுந்திருக்கவில்லை. | |
| (ஈ) | பிரதேச செயலகங்களின் ஆறு மீண்டுவரும் செலவுவிடயங்களில் கூட்டுமொத்தம் ரூபா 1.22 மில்லியன் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கான மீளாய்வாண்டு சேமிப்புக்களாக கூட்டுமொத்தம் ரூபா 0.03 மில்லியன் மட்டுமே காணப்படுகின்றமையால் ரூபா 1.19 மில்லியன் மிகைச்செலவினம் ஏற்பட்டுள்ளது. | சில முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மதிப்பீட்டிற்கு சவாலான செலவு விடயங்களின் மீது நிதியொதுக்கீட்டிலும் பார்க்க மீறுதலான தொகைகளை செலவு செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.<br><br>இவ்வாறான செலவு விடயங்களிற்குரிய கொடுப்பனவுகள் அதிகரித்ததன் காரணமாக நிதியொதுக்கீட்டை விட விஞ்சிய தொகை எம்மால் பொறுப்பாகக் காட்டப்பட்டது. இனிவருங்காலங்களில் இவ்வாறான விடயங்களில் எம்மால் கூடிய அக்கறை செலுத்தப்படும் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறேன். | தீர்க்கப்படாத பொறுப்புக்களாக காட்டப்படும் செலவீனங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு உள்ளதென்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

---

பல்வேறு பணிகளுக்காக 39 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 11,179.21 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 8,969.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 2,209.87 மில்லியன் பெறுமதியான 14 வீதமான தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது.

## 2.4 முற்பண கொடுப்பனவும் தீர்ப்பனவும்

முற்பண கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தினால் 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுமொத்த முற்பணங்கள் ரூபா 150,837 01 மாதம் தொடக்கம் 04 மாதங்கள் வரையான காலதாமத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளன. | அமைச்சிலிருந்து நிதியொதுக்கீடு தாமதமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டமை மற்றும் முற்பணம் பெற்று சுழற்சி முறையில் தொடர்ச்சியாகப் பாவிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் தாமதமாக சீர்செய்யப்பட்டது. | நிதிப்பிரமாணம் 371(2) இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.5 வைப்பு மீதிகள்**

வைப்பு மீதிகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மூன்றாம் தரப்பினருக்கு மீளளிக்கப்பட வேண்டிய தற்காலிக வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 0.69 மில்லியன் 06 மாதங்களுக்கு மேலாக உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டு வருகின்றது. | காணி சுவீகரிப்பிற்கான கொடுப்பனவு மற்றும் அதன் நிர்வாகச் செலவுக்குரிய வைப்புக்களுடன் தொடர்புடையவை தவிர்ந்த ஏனையவை தற்போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த தற்காலிக வைப்புப்பணங்கள் உரிய காலத்தினுள் உரிய நபர்களுக்கு மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | செலவின மீளளிப்பாக பெறப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 37.9 மில்லியன் 06 மாதங்களுக்கு மேலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு வருகின்றது. | காணி சுவீகரிப்பிற்கான கொடுப்பனவு மற்றும் அதன் நிர்வாகச் செலவுக்குரிய வைப்புக்களுடன் தொடர்புடையவை தவிர்ந்த ஏனையவை தற்போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த பணம் அந்த அமைச்சு மற்றும் திணைக்களங்களின் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால், அவை அரச செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கணக்கு வைக்கப்பட்ட தெகையினை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போது, அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பில் தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வட மாகாணசபைக்குரிய 31 திசெம்பர் 2019 இல் உள்ளவாறான வருமான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 13.61 மில்லியன் உரிய அமைச்சுக்களுக்கோ அல்லது திணைக்களங்களுக்கோ அனுப்பப்படாமல் வைப்புப் கணக்கில் இடப்பட்டுள்ளது. | கட்டுநிதி கிடைக்கப் பெறாமையால் 2019 திசெம்பர் இறுதிப்பகுதியில் மாகாணசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய கட்டுநிதியானது அனுப்பி வைக்கப்படவில்லை. தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. | வட மாகாணத்திற்குரிய வருமானங்கள் உரிய காலத்தில் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2 வருடங்கள் கடந்த நிலையில் கூட்டுமொத்தம் ரூபா 7.67 மில்லியன் பெறுமதியான 26 பிடிபண வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி 26 வைப்புக்களில் 02 வைப்புக்கள் தவிர ஏனையவை தற்போது சீர் செய்யப்படுகின்றன | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக திட்டமிடல் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட ஏனைய திட்டமிடல் அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய 5259 கம்பெரலிய செயற்திட்டங்களில் 5220 செயற்திட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டினுள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இத்திட்டங்களிற்காக ரூபா 2,711.25 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்டச்செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 2,627.29 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 83.96 மில்லியன் சேமிப்பு காணப்பட்டிருந்து. | வருட இறுதிப்பகுதியில் மேற்படி நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றதால் வேலைத்திட்டங்களை உரிய முறையில் கேள்வி நடைமுறைகளுக்கு அமைய செயற்படுத்துவதில் போதிய கால அவகாசம் இல்லாததினால் நிதியொதுக்கீடு மீளவும் அமைச்சிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீள் குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 50 சிறு கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட Colour Sorter machine, மற்றும் Automatic packing machine முறையே ரூபா 3,190,100 மற்றும் ரூபா 8,741,380 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இரண்டும் பயனாளியின் பாவனைக்கு பொருத்தமற்றவையாக வழங்கப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கூட்டுறவுச் சங்க உயர்மட்ட பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் இரு இயந்திரங்களையும் சீர் செய்து பாவனைக்கேற்றவாறு வழங்குமாறு வழங்கல் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர்களாலும் மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் நடைமுறைப்படுத்துவதில் நிறுவனம் காலதாமதம் ஏற்படுத்தி வருவதால் வழங்கவேண்டிய கொடுப்பனவுகளை கொடுத்து தீர்க்கப்படாமல் அரசிறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன் சரியான திட்டமிடலையும் தொழில்நுட்ப ஆய்வையம் மேற்கொள்வதன் மூலம் அவற்றினை வெற்றியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமற்ற இயந்திரங்கள் வழங்கப்படும் போது அவற்றை திருப்பியனுப்பி பொருத்தமானவற்றையே பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2018 ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கமைய மீள் குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 50 சிறுகைத்தொழில் செயற்திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு சித்த மருத்துவ உற்பத்தி, விற்பனை மற்றும் மருத்துவ சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 6 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் உற்பத்திக்கு பொருத்தமற்றவையாக வழங்கப்பட்டுள்ளமையால் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகிறது. | தங்களால் குறிப்பிடப்பட்ட இயந்திர உபகரணங்கள் வெளிநாடொன்றிலிருந்து குறித்த நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. எம்மால் வழங்கப்பட்டுள்ள விபரணக்குறிப்பிற்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்களின் வினைத்திறனிற்குமிடையே சில வேறுபாடுகள் காணப்பட்டுள்ளது. இதன்காரணமாக எம்மால் காசோலைகள் வழங்கப்படவில்லை. | செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன் சரியான திட்டமிடலையும் தொழில்நுட்ப ஆய்வையம் மேற்கொள்வதன் மூலம் அவற்றினை வெற்றியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமற்ற இயந்திரங்கள் வழங்கப்படும் போது அவற்றை திருப்பியனுப்பி பொருத்தமானவற்றையே பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | J/46, காரைநகர் வடக்கு, காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம் (RIDP) மற்றும் (RRDP) துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆலங்கண்டி விளையாட்டு மைதானத்திற்கான கட்டடம் ரூபா 1,980,000 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் விளையாட்டு மைதான வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் நாளது வரை மைதான கட்டிடம் பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதாரத் தொற்று சம்பந்தமான அசாதாரண சூழ்நிலை காரணமாக சில காலங்கள் இம்மைதானத்தை பயன்படுத்தமுடியாமல் போய்விட்டது. தற்போது இளஞ்சோலை விளையாட்டுக் கழகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | பயன்படுத்தப்படாதிருக்கும் சொத்துக்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஈ) | யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் வேலை தேடுவோருக்காக பயிற்சிகளை வழங்கும் நோக்கத்திற்காக SMART Srilanka செயற்திட்டத்தின் கீழ் ரூபா 13.75 மில்லியன் பெறுமதியில் 11.07.2019 ல் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட கட்டடம் மற்றும் உபகரணங்கள் உரிய தேவைக்கு நாளதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இச் செயற்திட்டம் தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்கள் நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெறாததால் கட்டடத்தை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியவில்லை. | பயன்படுத்தப்படாதிருக்கும் சொத்துக்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (உ) | J/376, நெல்லியடி கிராம அலுவலர் பிரிவில் துரித கிராமிய அபிவிருத்தித் திட்ட (RRDP) 2019 செயற்திட்டத்தின் கீழ் நெல்லியடி சனசமூக நிலைய (NCC) விளையாட்டுக் கழகத்திற்காக ரூபா 970,000 மதிப்பிலான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் பயனாளிகளால் நாளதுவரை பயன்படுத்தப்படடிருக்கவில்லை | கட்டடத்திற்கான நிதியொதுக்கீடு முழுமையாக கிடைக்கப்பெறாமல் பகுதியளவிலே கிடைக்கப்பெற்றது. மேலதிக நிதியொதுக்கீடு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் வேலைகளை பூரணமாக நிவை செய்யப்பட்டு உரிய நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படும். | பயன்படுத்தப்படாதிருக்கும் சொத்துக்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீள் குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 50 சிறு கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் 12,116,860 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 3 மாத கால தாமதத்தின் பின்னர் 27 யூன் 2019 அன்றே வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு குறித்த நிறுவனத்தால் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட இறக்குமதி நடைமுறைகளின் காரணமாக தாமதம் ஏற்பட்டது. | வழங்குனர்களிடம் கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்படும் போது எவ்வளவு காலத்திற்குள் பொருட்கள் வழங்கி நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். தாமதம் ஏற்படும் போது அதற்கான தண்டப்பண அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் 21.87 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட கலாச்சார மண்டபம் 31.டிசெம்பர்.2017 ல் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 6 மாத கால தாமதத்தின் பின்னரேயே முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் காலதாமதத்திற்கான தண்டப்பணமான ரூபா 247,380 ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி இல 6.4 இன் படி அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் காலதாமதத்திற்கான தண்டப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 16.78 மில்லியன் பெறுமதியில் கலாச்சார மத்திய நிலைய நிர்மாணம் 31 மார்ச் 2018 அன்று முடிவுறுத்தப்படவேண்டியிருந்த போதிலும் 9 மாத காலம் தாமதமாக 26.டிசெம்பர்.2018 அன்று முடிவுறுத்தப்பட்டிருந்தது. | தற்போது தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் காலதாமதத்திற்கான தண்டப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அத்துடன் காலதாமதத்திற்கான தண்டப்பணமான ரூபா 251,770 ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி இல 6.4 இன் படி அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 50 சிறு கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பழச்சாறு உற்பத்திக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 6,757,745 பெறுமதியான இயந்திரங்கள் 11 மாத காலதாமதத்தின் பின்னர் 25.டிசெம்பர்.2019 ல் வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு குறித்த நிறுவனத்தால் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட இறக்குமதி நடைமுறைகளின் காரணமாக தாமதம் ஏற்பட்டது. எனினும் உரிய காலப்பகுதியில் வழங்குவதில் மேற்படி நிறுவனம் தவறி விட்டதன் காரணமாக அந் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய இறுதிக் கொடுப்பனவானது கொடுத்து தீர்க்கப்படாமல் அரசிறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன் சரியான திட்டமிடலையும் உற்பத்தியாளரின் தேவையை சரியான முறையில் கண்டறிந்து தொழில்நுட்ப ஆய்வையும் மேற்கொள்வதன் மூலம் இது போன்ற பின்னடைவுகளை சீராக்க முடியும். |
| (உ) | வலிகாமம் வடக்கு பிரதேச செயலக J/225, கொல்லங்கலட்டி கிராம அலுவலர் பிரிவில் (Power Loom) மின்தறி நிலையக் கட்டிட நிர்மாணம் மற்றும் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக கூட்டுமொத்தம் ரூபா 8.32 மில்லியன் பெறுமதி செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அவை நாளது வரை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டட வேலைகளில் ஏற்பட்ட சில குறைபாடுகள் ஒப்பந்ததாரருக்கு சுட்டிக்காட்டப்பட்டு அவரால் குறைபாடுகள் சீர் செய்யப்பட்டு வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. தற்போது வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தால் பயிற்றப்பட்ட ஆளணியினரைக் கொண்டு இயக்கப்படவுள்ளது. | செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன் சரியான திட்டமிடலையும் உற்பத்தியாளரின் தேவையை சரியான முறையில் கண்டறிந்து தொழில்நுட்ப ஆய்வையும் மேற்கொள்வதன் மூலம் இது போன்ற பின்னடைவுகளை சீராக்க முடியும். |
| (ஊ) | சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நெற்களஞ்சிய சாலை நிர்மாணிப்பு 02.ஒக்டோபர்.2018 அன்று முடிவுறுத்தப்படவேண்டியிருந்த போதிலும் 9 மாத கால தாமதமாக 08.ஆகஸ்ட்.2019 அன்றே முடிவுறுத்தப்பட்டிருந்தது. | கட்டுமான வேலைக்கான மூலப் பொருட்கள் கிடைப்பனவில் ஏற்படும் காலதாமதத்தாலும் வருட இறுதியில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களாலும் உரிய நேரத்தில் நிறைவேற்றமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. | கட்டட ஒப்பந்த வேலைகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

3.4 **பெறுகைகள்**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செயற்பாட்டின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 76.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 65 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த நிதி தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவு திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.<br><br>**கொள்வனவு திட்டங்கள் மற்றும் ஆரம்ப நிலை**<br><br>இந்தக் கட்டத்தின் கீழ்வரும் செயற்திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) பிரதான கொள்வனவுத் திட்டம்<br>(ii) கொள்வனவுப் பொதியின் சுருக்கம்<br>(iii) ஆரம்பக் கொள்வனவுத் திட்டம்<br>(iv) இனங்காணப்பட்ட கொள்வனவுடன் தொடர்பான விசேட அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் | தங்களின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் கொள்வனவுப் பொதியின் சுருக்கம், ஆரம்ப பெறுகைத் திட்டம் என்பன 2018 இலிருந்து பேணப்படுகிறது | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்படுவதை கணக்கிட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (v) விதந்துரைப்புகள்,<br>திட்டமிடல்,<br>அடிக்குறிப்புகள்,<br>நிர்மாணங்கள்<br>ஆகியவற்றின் அபிவிருத்தி | | |
| (ஆ) | **ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்**<br>------------------------------------<br>இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்<br>(i) ஒவ்வொரு ஒப்பந்ததொகுதி மற்றும் கொள்வனவுக்கால உப அட்டவணைகள் (கொ.கா.அ)<br>(ii) வேலை, பொருட்கள் மற்றும் சேவை விரிவான கொள்வனவுத் திட்டம்<br>(iii) மதியுரை சேவைகளுக்கான விரிவான கொள்வனவுத் திட்டம் மேற்கூறியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பெறுவனவுக்கு முன்னைய கட்டத்திலும் எம்மால் சம்மந்தப்பட்ட சகல ஆவணங்களும் தயாரிக்கப்படுகினறன. எனினும் சில ஆவணங்களைத் தயாரித்தலுக்கான தேவைப்பாடுகள் மற்றும் சூழ்நிலைகள் தோன்றாத காரணத்தினால் அவை தயாரிக்கப்படவில்லை. எனினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து அவற்றைப் பேண எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | **ஒப்பந்தத்தின் பின்னரான (ஒப்பந்த நிர்வாக) கட்டம்**<br>------------------------------------<br>இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) ஒப்பந்த நிர்வாகத் திட்டம் (ஒ.நி)<br>(ii) ஒப்பந்த நிர்வாகத் திட்டத்துடன் இணைந்த காசுப்பாய்ச்சல் திட்டம் | ஒவ்வொரு பெறுவனவுக்கு பின்னைய கட்டத்திலும் எம்மால் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் கொடுப்பனவினை மேற்கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்படுகின்றன. எனினும் சில ஆவணங்களைத் தயாரித்தலுக்கான தேவைப்பாடுகள் மற்றும் சூழ்நிலைகள் தோன்றாத காரணத்தினால் அவை தயாரிக்கப்படவில்லை. எனினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து அவற்றைப் பேண எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**கணக்காய்வு அவதானிப்பு**

நடைமுறையல்லாச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகயும் பயன்படுத்தப்பட்டிருந்தன. விபரம் வருமாறு

| | சொத்து வகை | கூறுகளின் எணணிக்கை | பெறுமதி | குறைவாக பயனப்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | வருடங்கள் |
| (அ) | கட்டிடங்கள் | 02 | 14.72 | 1 |
| (ஆ) | மோட்டார் சைக்கிள்கள் | 11 | 8.69 | 3 – 9 |
| (இ) | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 06 | 1.24 | 3 – 5 |
| (ஈ) | அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் | 150 | 0.44 | 3 |

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

கட்டடங்கள் தற்போது வினைத்திறனாகப் பயன்படுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மேட்டார் சைக்கிள்களின் உரிமை மாகாணசபைக்குரியதாகும். இவற்றை உடமைமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
06 கடற்கலங்கள் தற்போது பிரதேச சபை வேலணைக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது
150 உயிர்காப்பு அங்கிகள் குறைப்பாவனையுடையதாகக் காணப்பட்டது. தற்போது பிரதேச சபை வேலணைக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது

**பரிந்துரை**

1997 செப்தம்பர் 30 ஆந் திகதிய 353 ஆம் இலக்க, 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம் விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலக பதிய நிர்வாக கட்டடத் தொகுதியில் ரூபா 4.56 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட மின்உயர்த்திக்கு வருடாந்த பராமரிப்பு சேவைக்காக ரூபா 207,000 வெலவிடப்படுகின்ற போதிலும் பராமரிப்பு சேவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பராமரிப்பு சேவை நடைபெறாமையால் அடிக்கடி பழுதடைந்து தொடர்சியாக 3 மாத காலமாக பாவனையற்ற நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பில் சீர் செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை மாவட்ட செயலகத்தால் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பராமரிப்பு ஒப்பந்த நிபந்தனையின் படி சேவை வழங்குனரிடமிருந்து வினைத்திறனான சேவையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

மேற்படி விடயம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்க வேண்டிய மாவட்டத்திலுள்ள 03 பிரதேச செயலகங்களின் 04 உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்காமையால் அவர்களது தவறுகளால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஈடுசெய்யக்கூடிய வகையில் முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொள்ள மாவட்டச் செயலாளர் தவறியிருந்தார். | தங்களால் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் தற்போது சீர்செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்கப்படல் வேண்டும் |

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

------------------------------------------

மேற்படி விடயம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 18 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் இருந்து பல்வேறு காரணங்களால் ரூபா 2.08 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் நிதிப் பிரமாணம் 113 இற்கு அமைவாக கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டபபட்டிருந்தன. | உள்நாட்டலுவல்கள் அமைச்சின; HA/F/01/CIRCULARS/Gen இலக்க 02.04.2019 ஆம் திகதிய கடிதத்தின் சார்பாக ரூபா 250,000 இற்கு உட்பட்ட நட்டத்தொகையைப் பதிவழிப்பதற்கு அரசாங்க அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நல்லூர் பிரதேச செயலகத்தின; ரூபா 116,634 மற்றும் பிரதேச செயலகம், தெல்லிப்பளை ரூபா 209,945 ஆகிய தொகைகள் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. எமது JK/SW/Loss/V/162/18 இலக்க 02.05.2019 ஆம் திகதிய கடித்தின் பிரகாரம் பிரதேச செயலகம் சாவகச்சேரியில் ஏற்பட்ட நட்டத்தொகை ரூபா 16,016,959 மற்றும் பிரதேச செயலகம் சங்கானை ரூபா 459,850 ஆகியவற்றைப் பதிவழிப்பு செய்வதற்கான அனுமதி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறவில்லை. | நிதிப் பிரமாணம் 113 இற்கு அமைவாக கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் காரைநகர் மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகங்களின் பாவனையிலுள்ள வாகனங்கள் இரண்டு விபத்துக்குள்ளானமை தொடர்பில் ஏற்பட்ட நட்டம் முறையே ரூபா 448,550, ரூபா 21,400 என்பவை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காரைநகர் பிரதேச செயலகத்தின் வாகன நட்டத்தின் பதிவழிப்பதற்கான அனுமதியை அமைச்சிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் வாகன நட்டமான ரூபா 21,400 23.மே.2020 ல் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | வாகனங்களுக்கு ஏற்படும் நட்டங்கள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதி இல 104 தொடக்கம் 109 வரையுள்ள விதி முறைகள் பின்பற்றப்படுவதுடன் எஞ்சிய நட்டங்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலுக்கு தானியங்கி கதவு பொருத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1.28 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் மேற்படி தானியங்கி கதவு நாளது வரை உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாதுள்ளது. | அதிகரித்த மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்தும் விதமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்படி கதவு எம்மால் பாவிக்கப்பட்டு வருகின்றது. | இவ்வாறான தேவையற்ற செலவினங்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4 நிலைபேறான நோக்கங்களை அடைந்து கோள்ளல்**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஐக்கிய நாடுகளிற்கான 230 நிகழ்ச்சி நிரலிற்கு இணங்கவும் 2017 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி | தேசிய மட்டத்தில் அடையாளங்காணப்பட்டு செயற்படுத்தவுள்ள நிலையான அபிவிருத்திப் பேறுகளை மாவட்ட மட்டத்தில் அடையும் பொருட்டு காலத்திற்குக் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளில் கூறப்பட்டவாறு திட்டங்களைத் தயாரித்து தொழிற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அதிகார சட்டத்தை பின்பற்றியும் செயற்பட வேண்டியதுடன் சுற்றறிக்கைகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பாக அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் அறிந்து கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உரிய நிறுவனத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டியபோதிலும் மாவட்டச் செயலகம் மேற்படி விடயத்தை அறிந்திருக்காததால் இதன் தொழிற்பாடுகள் தொடர்பான நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இவ் இலக்குகளை அடைந்து கொள்வதை அளவிடுவதற்கு தேவையான சுட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | காலம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச முகவர் நிலையங்களூடாக எமக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் மாவட்டச் செயலகத்தால் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | எடுக்கப்பட வேண்டும் |

## 5 மனித வள முகாமைத்துவம்

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகைப்பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 55 | 52 | 03 | - |
| மூன்றாம் நிலை | 64 | 30 | 35 | 01 |
| இரண்டாம் நிலை | 1,134 | 1,062 | 77 | 05 |
| ஆரம்ப நிலை | 207 | 172 | 36 | 01 |
| **மொத்தம்** | **1,460** | **1,316** | **151** | **07** |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------------- | --------------------------------------------------- | -------------- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 151 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருத்தமானவாறு நியமிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒவ்வொரு அரச அதிபர் மாநாட்டிலும் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் சார்பாக மாவட்ட மட்டத்தில் இன்னமும் பூரணப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்கள் தொடர்பில் பிரேரிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் நியமன அதிகாரிகளினால் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப் படாதுள்ளது. | அனுமதிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய ஆட்சேர்ப்பு திட்டம் பினபற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 07 மிகை ஆளணியினரை தேவையான இடங்களுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஒரு தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவியணி தகவல் தொழில்நுட்ப அலுவலரால் நிரப்பப்பட்டுள்ளது.<br><br>05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் SMART Srilanka என்ற சிறப்பு செயற்திட்டத்திற்காக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் பராமரிக்கப்படும் அரச விடுதிக்கான 02 பராமரிப்பாளர்களிற்கான பதவியணி, மாவட்ட பதவியணியினர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 01 பதவி வெற்றிடமே ஏற்படக்கூடியதாக காணப்படும்.<br><br>எவ்வாறெனினும் மேற்படி விடயங்கள் 2021 ஆண்டு இடமாற்றத்தின் போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை ஆளணியினரை பிரதேச செயலகங்களின் காணப்படுன்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |